# ஏர் ப்ரீஹீட்டர் வழியனுப்பு விழா

திருவெறும்பூர், செப். 29-

துவாக்குடி சிட்கோவில் உள்ள ஜுக்கோ எனர்கான் நிறுவனம் ஏர் ப்ரீஹீட்டர் பாகங்களை உற்பத்தி செய்து இந்தியா மற்றும் வெளிநாடுகளில் விற்பனை செய்து வருகிறது. மேலும் பழைய ஏர் ப்ரீஹீட்டரைப் புதுப்பித்தும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது.

இந்நிலையில் தற்போது வடிவமைக்கப்பட்ட முழுமையான ஏர் ப்ரீ ஹீட்டரின் உற்பத்தி செய்யப்பட்ட முதல் பாகங்களை சட்டீஸ்கர் மாநிலத்திற்கு வழியனுப்பும் விழா புதுப்பட்டி தொழிற்சாலையில் நடந்தது.

சிறப்பு விருந்தினராக வேதாந்தா நிறுவன தலைமை வர்த்தகர் பிரேம்குமார் கலந்து கொண்டு கொடியசைத்து சட்டீஸ்கர் மாநிலத்திற்கு ஏர்ப்ரீ ஹீட்டரை வழியனுப்பி வைத்தார். அப்போது நிறுவன அதிகாரிகள் ராஜகோபால், குணசேகரன், அமிர்தலிங்கம், மனோகர், பூபதி உட்பட பலர் உடனிருந்தனர்.




துவாக்குடி சிட்கோவில் உள்ள ஜூக்கோ எனர்கான் நிறுவனத்தில் நடந்த விழாவில் சட்டீஸ்கர் மாநிலத்திற்கு ஏர்ப்ரீ ஹீட்டரை வேதாந்தா நிறுவன தலைமை வர்த்தகர் பிரேம்குமார் வழியனுப்பி வைத்தார்.